**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**STC.No.151/2024**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : செல்வன் | **Caste** | : |
| **Father's Name** | : சீமைச்சாமி | **Calling** | : உணவுப் பாதுகாப்பு அலுவலர் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 55/2025 |
| | | **Dated** | : 29.10.2025 |

**29.10.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திரு. செல்வன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 எதிரி ஆஜர். 2 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

<u>**முதல் விசாரணை**</u>

நான் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் மற்றும் ரெட்டியார் சத்திரம் வட்டார உணவுப் பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 22.03.2022ம் தேதி திண்டுக்கல் நகர் உணவுப் பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வந்தபோது உணவு மாதிரி எடுப்பதற்காக திண்டுக்கல் நகரம் 16 மாரியம்மன் கோவில் வளாகம் மேற்குரதவீதி, சங்கர் ஸ்டோர் முன்புறம் எனது தினசரி ஆய்விற்காக சென்றபோது 1ம் எதிரி தனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் ஒரு சாக்குப்பையில் சந்தேகத்திற்குஇடமான

முறையில் V1 புகையிலை பாக்கெட்டுகளை விற்பனைக்கு வைத்திருந்தார். என்னை அறிமுகம் செய்துகொண்டு எதிரி 1 யை விசாரணை செய்தததில் ரெட்டியார் சத்திரம் வட்டாரம் காமாட்சிபுரம் 111 நரிப்பட்டி ரோடு என்ற முகவிரியில் சீதா ஸ்டோர் என்ற பெயரில் மளிகை கடை நடத்திவருவதாகவும் தினசரி தனது மளிகைக் கடைக்கு மளிகை பொருட்களை வாங்க திண்டுக்கல் தினசரி அங்காடிக்கு வரும்பொழுது மேற்படி புகையிலை பொருட்களை எடுத்துவந்து திண்டுக்கல் நகர் பகுதியில் விற்பனை செய்ததாக தெரிவித்தார்.

மேற்படி உணவுப் பொருளில் தரத்தில் சந்தேகித்து உணவு மாதிரி எடுக்க முடிவு செய்தேன். 1ம் எதிரி தமிழக அரசால் விற்பனை செய்யவும் இருப்பு செய்யவும் விநியோகம் செய்யவும் தயார் செய்யவும் தடை செய்யப்பட்ட V-1 புகையிலை 16 பாக்கெட்டுகள் வைத்திருந்தார். மேற்படி V-1 புகையிலை பாக்கெட்டுகளை ஊர் பெயர், முகவரி தெரியாத வெளி நபரிடம் விலைக்கு வாங்கியதாகவும் அது சம்பந்தப்பட் பில்கள் என்னிடம் இல்லை எனவும் தெரிவித்தார்.

16 பாக்கெட் V-1 புகையிலைகளை உணவு மாதிரி எடுக்க முடிவு செய்து மேற்படி உணவுப் பொருளின் தரத்தை சந்தேகித்து உணவு மாதிரிகளை எடுக்க முடிவு செய்தேன். மேற்படி சம்பவத்தை பார்த்துக்கொண்டிருந்த சேகர் , த/பெ.வெள்ளைச்சாமி, 16, மாரியம்மன் கோவில் வளாகம் , மேற்கு ரதவீதி, திண்டுக்கல் என்பவரை பொது சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டேன் . அவரும் சம்மதித்து ஆரம்பம் முதல் இறுதி வரை இருந்தார். பின்பு படிவம் V-A தயாரித்து எதிரி 1 யிடமும் சாட்சியிடமும் கையொப்பம் பெற்று முறையாக சார்பு செய்தேன். 16 பாக்கெட்டுகள் V-1 புகையிலைக்கான ரொக்கத்தொகையாக ரூபாய் 480 கொடுத்து உரிய ரசீது பெற்றுக்கொண்டேன்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கல் விதி 2011-2.4.1 யினை முறையாக கடைபிடித்து உணவு மாதிரி எடுத்தேன். உணவு மாதிரியினை I,II,III,IV என குறியீடு செய்தேன். எதிரி 1யிடம் சீலிட்ட உணவு மாதிரியின் ஒரு பாகத்தினை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பகுப்பாய்வு கூடத்திற்கு (NABL) அனுப்ப விருப்பமுள்ளதா என கேட்டுக்கொண்டதற்கு அவரும் விபரத்தினை தெரிந்துகொண்டு தனக்கு விருப்பமில்லை என மகஜர் மனு சமர்பித்தார். உணவு மாதிரி எடுத்த விபரத்தினை நியமண அலுவலருக்கு முறையாக தெரிவித்தேன். படிவம் VI மாதிரி முத்திரை பதித்த படிவம் முறையாக தயாரித்தேன். சீலிட்ட உணவு மாதிரி ஒரு பாகத்துடன் படிவம் VI மாதிரி சீல் வைத்த படிவம் ஆகியவற்றை வைத்து

பாதுகாப்பாக பொட்டலமிட்டு உணவு பாகுப்பாய்வாளர் பாளையங்கோட்டை அவர்களுக்கு அன்றையதினமே அனுப்பி வைத்து உரிய ரசீதினை பெற்றுக்கொண்டேன். மேலும் தனியாக படிவம் VI மாதிரி முத்திரை பதித்த படிவத்தினை உணவு பகுப்பாய்வாளர் பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்தேன். மீதமுள்ள சீலிட்ட உணவு மாதிரி 3 பாகத்தினை மாவட்ட நியமண அலுவலரிடம் ஒப்படைத்து ஒப்புகையை பெற்றுக்கொண்டேன்.

4) உணவு மாதிரி எடுத்த விபரத்தினை அதன் தயாரிப்பு நிறுவனத்திற்கு (V.R.G Products Pvt.Ltd.) முறையாக படிவம் V-A யினை தயாரித்து அன்றையதினமே அனுப்பி வைத்தேன். பின்பு தயாரிப்பு நிறுவனத்திற்கு உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் விதி 2011-2.4.1(10)(iii) ன் படி அறிவிப்பினையும் மற்றும் தயாரிப்பு நிறுவனத்தின் உரிமம் பெற்ற விவரத்தினையும் பங்குதாரர்கள் விவரத்தினையும் அனுப்பிவைக்கும்படி உணவு பாதுகாப்பு தரங்கள் சட்டம் 2006 பிரிவு 66 ன் கீழ் அறிவிப்பினையும் முறையாக அனுப்பிவைத்தேன். மேலும் படிவம் V-A யினை தயாரிப்பு நிறுவனத்தின் இயக்குநர் திரு.மனோஜ்குமார் Sri vastava என்பவரிடம் அனுப்பி வைத்தேன்.

சீலிட்ட உணவு மாதிரியினை 23.03.2022 அன்று உணவு பகுப்பாய்வாளர் பெற்றுக்கொண்டு உரிய காலஅளவான 14 நாட்களுக்குள் உணவு மாதிரியினை பகுப்பாய்வு செய்யது பகுப்பாய்வு அறிக்கையினை 31.03.2022ம் தேதியிட்ட அறிக்கையினை 01.04.2022 அன்று நியமன அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மேற்படி பகுப்பாய்வு அறிக்கையினை எதிரிகளுக்கு 06.04.2022ல் மேல்முறையீட்டு அறிவிப்புடன் பதிவு அஞ்சலில் நியமண அலுவலரால் அனுப்பி வைத்தார். மேற்படி பகுப்பாய்வு அறிக்கையில் V-1 புகையிலை உணவு மாதிரியானது பாதுகாப்பு அற்றது மற்றும் விற்பனைக்கு தடை செய்யப்பட்டது என சான்றிடப்பட்டிருந்தது. நியமண அலுவலர் அவர்களின் மேல் முறையீட்டு அறிவிப்பு மற்றும் பகுப்பாய்வு அறிக்கையினை பெற்றுக்கொண்ட தயாரிப்பு நிறுவனம் தனது நிறுவனத்தின் விவரங்களை உரிய கால அளவான 30 நாட்களுக்குள் விவரம் சமர்ப்பிக்கவில்லை.

மேற்படி பகுப்பாய்வு அறிக்கையில் V-1 புகையி்லை உணவு மாதிரியானது பாதுகாப்பு அற்றது மற்றும் விற்பனைக்கு தடை செய்யப்பட்டது என்றும் உணவு மாதிரியில் நிகோடின் என்ற

வேதிப்பொருள் கலந்துள்ளதாகவும் தமிழக அரசின் 23.05.2021ம் தேதி தடை ஆணையை மீறி மேற்படி தடை செய்யப்பட்ட புகையிலை விற்பனைக்கு வைத்திருந்தார். அதன்பேரில் எதிரிகள் மீது நீதிமன்றத்தில் குற்றவழக்கு தொடர முறையாக குற்றச்சாட்டு தயாரித்து உரிய காலஅளவான 14 நாட்களுக்குள் உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம் 2006 பிரிவு 58, 59(i) மற்றும் 63 ஆகிய பிரிவின் கீழ் அனுமதி வேண்டி உணவு பாதுகாப்பு ஆணையருக்கு நியமன அலுவலர் மூலம் அனுப்பி வைத்தேன். எதிரிகள் 1 முதல் 6 வரை தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள V-1 புகையிலை தயார் செய்து விற்பனை செய்ததற்காக உணவு பாதுகாப்பு சட்டம் பிரிவு 59(i), 58 கீழ் அபராதத்துடன் கூடிய தண்டனை வழங்குமாறும் உணவு பாதுகாப்பு உரிமம் பெறாமல் உணவு வணிகம் செய்தது உணவு பாதுகாப்பு சட்டம் பிரிவு 63க்கு புறம்பானதாகும். மேற்படி பிரிவின் கீழ் எதிரிகளுக்கு அபராதத்துடன் தண்டனை கொடுக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளார்கள். எதிரிகள்

6) உணவுப் பாதுகாப்பு ஆணையர் மேற்படி கோப்பினை கவனமாக பரிசீலித்து எதிரிகள் 1 முதல் 6 வரை ஆகியோர் மீது உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2006 பிரிவு 58, 59(1), 63 ன் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளார். அதன்பேரில் எதிரிகள் 1-6 ஆகியோர் மீது மேற்படி பிரிவின் கீழ் தனிப்புகாராக மாண்புமிகு நீதித்துறை நடுவர் எண்.II அவர்களிடம் தாக்கல் செய்தேன். மேலும் கூடுதலாக அனுமதி ஆணை வழக்க ஏற்பட்ட காலதாமதத்திற்கு உணவுப் பாதுகாப்பு ஆணையாளர் அவர்களின் அதிகார வரம்பின் கீழ் பிரிவு 77ன் படி காலநீட்டிப்பு செய்து ஆணையிட்டுள்ளார்கள். எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**1) 13.08.2018 உணவுப் பாதுகாப்பு அலுவலரின் நியமண ஆணை அசாஆ.1**

**2) 23.03.2022 ம் தேதியிட்ட 1ம் எதிரியின் ஆதார் நகல் அசாஆ.2**

**3) 22.03.2022 1ம் எதிரியின் உணவுப்பாதுகாப்பு துறையின் உரிம நகல் அசாஆ.3**

**4) 23.05.2021ம் தேதி சென்னை உணவு பாதுகாப்பு ஆணையாளர் அவர்களின் தடை ஆணை அ.சா.ஆ.4**

5) 22.03.2022ம் தேதியிட்ட படிவம் V-A எதிரி 1க்கு சார்பு செய்யப்பட்டது. அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 22.03.2022ம் தேதி 1ம் எதிரியின் ரொக்க ரசீது. அ.சா.ஆ.6.

7) 22.03.2022ம் தேதியிட்ட 1ம் எதிரியின் மகஜர் மனு அ.சா.ஆ.7

8)22.03.2022 ம் தேதியிட்ட நியமண அலுவலருக்கு தகவல் தெரிவித்த படிவம். அ.சா.ஆ.8

9) 22.03.2022ம் தேதியிட்ட உணவு பகுப்பாய்வாளருக்கு அனுப்பிய படிவம் VI அ.சா.ஆ 9

10)22.03.2022ம் தேதியிட்ட மாதிரி முத்திரை படித்த படிவம் அ.சா.ஆ.10

11) 22.03.2022ம் தேதியிட்ட உணவு பகுப்பாய்வாளர் அவர்களுக்கு உணவு மாரியை தனியான படிவம் VI மற்றும் மாதிரி முத்திரை பதித்த படிவம் ஆகியவற்றை கொரியர் மூலம் அனுப்பியதற்கான ரசீது அ.சா.ஆ.11

12) 22.03.2022ம் தேதியிட்ட நியமன அலுவலரின் ஒப்புகை கடிதம் அ.சா.ஆ.12

13) 22.03.2022ம் தேதியிட்ட தயாரிப்பாளருக்கு அனுப்பிய படிவம் V-A அ.சா.ஆ-13.

14) 22.03.2022ம் தேதியிட்ட உணவு பாதுகாப்பு விதி 2.4.1.10(iii) ன் கீழ் தயாரிப்பாளருக்கு அனுப்பிய படிவம் அ.சா.ஆ.14.

15) 22.03.2022ம் தேதியிட்ட தயாரிப்பு நிறுவன இயக்குநருக்கு அனுப்பிய படிவம் V-A அ.சா.ஆ.15

16) 22.03.2022ம் தேதியிட்ட தயாரிப்பு நிறுவனத்திற்கு பிரிவு 66ன் கீழ் அனுப்பிய அறிவிப்பு அ.சா.ஆ.16.

17) 22.03.2022ம் தேதியிட்ட தயாரிப்பு நிறுவனத்தில் GST சான்று 3 தாள்கள் அ.சா.ஆ.17.

**18) 31.03.2022ம் தேதியிட்ட உணவு பகுப்பாய்வாளரின் பகுப்பாய்வு அறிக்கை எண். 2168/21-22 அறிக்கை அ.சா.ஆ.18**

**19) 06.04.2022ம் தேதியிட்ட நியமன அலுவலர் 1ம் எதிரிக்கும் தயாரிப்பு நிறுவனத்திற்கும் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் அறிவிப்பினை அனுப்பியது அ.சா.ஆ.19.**

**20) 11.04.2022 ம் தேதி நியமன அலுவலர் எதிரிகள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர சம்பந்தப்பட்ட ஆவணங்களை சென்னை உணவு பாதுகாப்பு ஆணையருக்கு அனுமதி வேண்டி பரிந்துரைத்த கடிதம் அ.சா.ஆ.20.**

**21) 21.11.2023 சென்னை உணவு பாதுகாப்பு ஆணையர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடர அனுமதி ஆணை அ.சா.ஆ.21.**

**22) 26.12.2023ம் தேதி கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தனி புகார் அ.சா.ஆ.22.**

<u>2 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

<u>மறு விசாரணை</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.10.29 13:37:16 +0530

Judicial Magistrate No.II
Dindigul.